අධ්‍යාපන අමාත්‍යාංශය

**கல்வி அமைச்சு**

**Ministry of Education**

"ඉසුරුපාය" , ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල

“இசுருபாயா“ ஸ்ரீ ஜயவர்தனபுர காட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர; / Minister } 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50, **Fax**: 2784846

ඊමේල්/ஈ-மெயில;/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல / Your No. }

මගේ අංකය / எமது இல. / My No. } Ed/3/44/5/CIR/2008

දිනය / திகதி / Date } 2008.03.10

**சுற்றறிக்கை இல : 2008.∴06**

மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
மற்றும் சகல அதிபர்கள்

**கல்வி பண்புசார் தரத்தை உறுதி செய்வதற்கான**
**<u>மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்பு வேலைத்திட்டம்</u>**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 13வது திருத்தச்சட்டத்தின் 3ஆவது அத்தியாயத்தின் 2பீ பிரிவிற்கமைய கல்வியின் தரம் மற்றும் பண்புசார் விருத்தியை தொடர்ச்சியாக முன்னெடுப்பது நிரல் அமைச்சிற்கு உள்ள பிரதான பொறுப்பாகும். இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்துடன் 2004.01.15ஆம் திகதி தொடக்கம் கல்வி அமைச்சில் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகு தாபிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இடைநிலைக் கல்வி நவீனமயச் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாகிய கல்வியின் பண்புசார் விருத்தியை உறுதிசெய்யும் பிரதான நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவினால் கல்வித் துறையின் மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவத்திற்காக பண்புத்தரங்கள், சுட்டிகள், நியதிகள் வகுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் அமைச்சின் முகாமைத்துவ தரஉறுதிப்பாட்டு அலகினால் உள்ளக மதிப்பீட்டிற்கான வழிகாட்டி, வெளிவாரி மதிப்பீட்டிற்கான வழிகாட்டி என இரண்டு அறிவுரை வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு சகல பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கல்வியின் தரம் மற்றும் வெளிவாரி மதிப்பீடுகள் தொடர்பான வழிகாட்டலைப் பயன்படுத்தி பாடசாலையின் பண்புசார் விருத்திக்காக அமுல்படுத்த வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக சகல தேசிய பாடசாலை அதிபர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட 30உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்கள் மூலம் மாகாணப் பாடசாலை அதிபர்களும், முகாமைத்துவ குழுக்களும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் கல்வியின் பண்புசார் தரத்தை உறுதி செய்வதற்கான புதிய மதிப்பீட்டு வேலைத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்க் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை வெற்றிகரமாக அமுலாக்க கல்வித் தொகுதியின் சகல மாகாண.∴. வலய.∴. கோட்ட கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

**பாடசாலை மட்டத்திலான பணிகள்**

1. தமது பாடசாலையில் கல்வியின் பண்புசார் தரத்தை உறுதி செய்வதற்கான தமது தொழில் வாண்மை விருத்திக்குத் தேவைப்படும் ‘‘மதிப்பீட்டு தர வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள பாடவிதானம், முகாமைத்துவம், மாணவர் அடைவு மட்டம் போன்ற முக்கிய துறைகளுக்குரிய சுட்டிகளைத் தேர்ந்தெடுத்து (இணைப்பு 01) அதனடிப்படையில் செயற்பட ஆசிரியர் குழாம்களை முன்னுரிமையடிப்படையில் தயார் செய்தல் வேண்டும். அத்துடன் இணைப்பு 02 இற்கமைய பாடசாலை உள்ளக மதிப்பீட்டுக் குழு அதிபரினால் நியமிக்கப்பட வேண்டும்.

2. பாடசாலை சிரேஷ்ட முகாமைத்துவக் குழு மற்றும் உள்ளக மதிப்பீட்டுக் குழு (இணைப்பு 02) மூலம் சேவையில் விணைத்திறனை ஏற்படுத்துவதற்காக பாடசாலையின் பண்புசார் தரத்தை உறுதி செய்ய கீழ்க் குறிப்பிடப்பட்ட வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

   2.1 மதிப்பீட்டிற்குட்படுத்தப்படும் துறைகள் மற்றும் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு இலகுவாக மதிப்பீட்டுத் திட்டங்களைத் தயாரித்து அதன் பிரதிகளை ஆசிரியர்களுக்கு வழங்கி அவர்களின் தொழிற் துறைகளின் தரத்தை பேணுவதற்கான தேவைகள் குறித்து ஆசிரியர்களை அறிவுறுத்தல். (இணைப்பு 03)
   2.2 தரவட்டம் தாபித்தல், அனுசரணையை வழங்குதல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல் (இணைப்பு 04)
   2.3 வகுப்பறை மதிப்பீடு மற்றும் கண்காணித்தல் மூலம் தகவல்களை அறிக்கைப்படுத்தல். (இணைப்பு 05)
   2.4 தவணைப் பரீட்சைகளின் பின்னர் மாணவர் அடைவு மட்டங்களின் ஆய்வு அறிக்கைகளை தயாரித்தல். (6 – 10 தரங்களுக்குரிய) (இணைப்பு 06)
   2.5 தமது பாடசாலை தொடர்பான மதிப்பீடுகளை வருடாந்தம் மேற்கொண்டு பாடசாலைகளின் பலம், பலவீனங்களை இனங்காணுதல். (இணைப்பு 07)

3. அதிபரினால் மேற்கூறப்பட்ட உபாயங்களுக்குரிய இணைப்பு 03, 04, 05, 06 மற்றும் 07 ஆகிய மாதிரிப் படிவங்களைப் பூர்த்திசெய்து அவ்வறிக்கைகளை வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக வலய கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பி.க.ப. க்கும், அதன் பிரதிகளை கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்ப வேண்டும்.

4. பாடசாலை உள்ளக மதிப்பீட்டு ஆவணத்தில் அல்லது ஊ.சு புத்தகத்தில் மேற்கூறப்பட்ட மதிப்பீட்டுப் பணிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய அறிக்கைகளின் பிரதிகளை வைத்துக்கொள்ள வேண்டும். இப்பணிகள் தொடர்பான அடிப்படைப் பொறுப்புக்கள் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதி அதிபருக்குரியதாகும்.

**கோட்ட மட்டத்திலான பணிகள்**

1. பாடசாலைகளிலிருந்து கிடைக்கும் உள்ளக மதிப்பீட்டு திட்டமிடல்களை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளின் உள்ளக மதிப்பீட்டுக் குழுவை சக்திமிக்கதாக்க அதிபருக்கு வழிகாட்டல்.

2. கோட்ட மட்டத்திலான அதிபர்கள் கூட்டத்தின் போது பாடசாலையினால் அபிவிருத்திக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவுகளுக்குரிய கல்விச்சுட்டிகள் தொடர்பாக தகவல் முறைமை ஒன்றினைப்பேணுதல். (இணைப்பு 08)

3. பாடசாலையினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டுத் திட்டமிடலுக்கமைய அபிவிருத்தி இலக்கினை நோக்கி பாடசாலையை வழிநடத்தி கோட்டத்தின் சகல பாடசாலைகளையும் மதிப்பீட்டிற்குட்படுத்தலும் பாடசாலைகளை மதிப்பீட்டிற்குட்படுத்தியதன் பின்னர் இரண்டு வாரத்திற்குள் பாடசாலைகளுக்கு அறிக்கையினை அனுப்புதலும்.

4. கோட்டத்தினால் அமுல்படுத்தப்படும் பாடசாலை வெளிமதிப்பீடு தொடர்பாக காலாண்டு முன்னேற்ற அறிக்கை (இணைப்பு 08) கோ.க.ப இனால் வ.க.ப இற்கு அனுப்புதல்.

**வலய மட்டத்திலான பணிகள்**

1. பாடசாலை மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் மதிப்பீட்டுத் திட்டத்தினையும், அறிக்கையையும் மீளாய்வுக்குட்படுத்தி பாடத்திற்கு பொறுப்பான பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஊடாக பின்னூட்டல் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தி வலயக் கல்வி தரத்தைப் பேணுவதற்காக வழிகாட்டல்.

2. அவ்வவ் பிரிவுகளுக்குரிய கல்விச்சுட்டியை அடிப்படையாகக் கொண்டு வெளிவாரி மதிப்பீடுகள் ஊடாக பாடசாலைகளின் முன்னேற்றத்தை மதிப்பீட்டுக்குட்படுத்தி கண்காணித்து அதன் அறிக்கையை 2 வாரத்திற்குள் பாடசாலைக்கு அனுப்புதல்.

3. வலயத்தின் வெளிவாரி மதிப்பீடுகள் தொடர்பான அறிக்கையை (இணைப்பு 09) நான்கு மாதத்திற்கு ஒரு தடவை கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகின் பணிப்பாளருக்கு பிரதியுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைத்தல்.

4. கல்வி அமைச்சினதும் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகினால் நடாத்தப்படும் வலய மதிப்பீட்டு முன்னோடி வேலைத்திட்டத்தினூடாக வலய மட்டத்தில் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

**மாகாண மட்டத்திலான பணிகள்**

1. வலய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகளின் கண்காணிப்பு நடவடிக்கைகளின் தரத்தை பேண நடவடிக்கை எடுத்தல்.

2. மாகாண மட்டத்தில் வலயப் பணிப்பாளர்களின் கூட்டங்களின்போது வலய மட்டங்களில் வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்தி அபிவிருத்திக்கு வழிகாட்டுதல்.
3. கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டினால் நடாத்தப்படும் வலய மதிப்பீட்டு வேலைத்திட்டத்திற்கு அவ்வலய மீளாய்வு அறிக்கைகளுடன் கலந்து கொள்ளுதல்.

4. மாகாண, வலய, கோட்ட வெளிவாரி மதிப்பீட்டு முன்னேற்றம் தொடர்பான அறிக்கையின் பிரதியை 6 மாதத்திற்கு ஒரு தடவை மாகாணக் கல்விச் செயலாளருக்கு பிரதியுடன் முகாமைத்துவ தர உறுதிப்பாடு இலகிற்கு (இணைப்பு 10) அனுப்ப வேண்டியதுடன், அதன் முன்னேற்றத்தை கல்வி அமைச்சின் மாதாந்த அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்தாலோசித்தல்.

**தேசிய மட்டத்திலான பணிகள்**

1. 2008ம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் அமைச்சின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிக்குழு மதிப்பீட்டுக்குப் பதிலாக முகாமைத்துவ தரஉறுதிப்பாடு அலகினால் வலய மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் மேற்பார்வை முன்னோடி செயற்பாடுகளை மேற்கொண்டு கல்வியின் பண்புசார் தரத்தை உறுதிசெய்வதற்கான உபாய முறைகளை அமுல்படுத்த வேண்டும். இதன்போது கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாடு அலகினால் அமைச்சின் விடயப் பணிப்பாளர் மற்றும் மாகாண மட்டத்திலான உத்தியோகத்தரின் பங்கேற்றலுடன் சகல வலயக் கல்வி அலுவலகங்களினதும் பாடசாலை வெளிமதிப்பீட்டு செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் உரிய வலயத்தின் பின்னடைவுகள் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றிற்குத் தேவையான தீர்வுகளை அமுல்படுத்தவும் வழிகாட்டப்படும்.

2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கையை மீளாய்வுக்குட்படுத்தலும் வலய மட்டத்திலான முன்னோடி அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு உரிய பிரச்சினைகளை இனங்கண்டு தேவைப்படும் தீர்வுகளை வழங்குதலும் கல்வியின் தரத்தைப் பேணுவதற்காக முகாமைத்துவ தர உறுதிப்பாடு அலகினால் தேசிய மட்டத்தில் தேவைப்படும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் நவீனமயச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- ✍ தேசிய பாடசாலைகள் உட்பட சகல அரச பாடசாலைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் வெளிவாரி மதிப்பீடுகள் வலய அலுவலகங்கள் மற்றும் கோட்ட அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படவேண்டியதுடன் விசேட சந்தர்ப்பங்ளில் மாத்திரம் அமைச்சு நேரடியாக பாடசாலை மேற்பார்வைகளை மேற்கொள்ளும். மேற்கூறப்பட்ட முறைகள் மற்றும் உபாயங்களை தெளிவாக இனங்கண்டு கல்வியின் தரத்தை உறுதிசெய்தல் மற்றும் உரிய தரத்தை பேணுவது கல்விப் பணிப்பாளர்கள்,அதிபர்கள் ஆகியவர்களது பொறுப்பு என்பதனை வலியுறுத்துகிறேன்.

- ✍ அவ்வாறே இந்த மதிப்பீட்டு கண்காணிப்பு பொறிமுறையினை வலுவூட்டுவதன் மூலம் முதலில் தெரிவு செய்யப்பட்ட பண்புத்தர துறைகளையும் படிப்படியாக ஏனைய பண்புத்தர துறைகளையும் உள்வாங்கி கல்வியின் தரத்தினை உறுதிசெய்ய பாடசாலை, கோட்ட, வலய மற்றும் மாகாணத்தினால் தொடர்ச்சியாக தேவைப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

**எம்.எம்.என்.டீ. பண்டார**
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :

1. கௌரவ கல்வி அமைச்சர் - அறிந்து கொள்ளும் பொருட்டு
2. கௌரவ மாகாண முதல் அமைச்சர்கள் - அ.கொ.பொ. / உரிய நடவடிக்கைகளுக்காக
3. மாகாணக் கல்விச் செயலாளர்கள் - அ.கொ.பொ. / உரிய நடவடிக்கைகளுக்காக
4. அமைச்சின் சகல பாடத்திற்கான பணிப்பாளர்கள் - முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகின் ஆரம்பத்திட்டமிடலுக்கமைய கல்வி வலய முன்னோடி மற்றும் மேற்பார்வை வேலைத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்வதற்காக.
5. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்- அ.கொ.பொ. / உரிய நடவடிக்கைகளுக்காக.
6. தலைவர் - தேசிய கல்வி ஆணைக்குழு - அ.கொ.பொ.
7. பரீட்சை ஆணையாளர் நாயகம் - தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சார்த்தலுக்குமான சேவை - அ.கொ.பொ. / உரிய நடவடிக்கைகளுக்காக.

பின்னிணைப்பு 01

## அபிவிருத்தி இலக்கை தேர்ந்தெடுக்கும் போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள்

1. அதிபர் உட்பட சிரேஷ்ட முகாமையாளர்களினால் தமது பாடசாலையின் கல்வி பண்புசார் அபிவிருத்திக்குரிய துறைகளுக்கான சுட்டிகள்.∴ இலக்கை தேர்ந்தெடுத்து ஆய்வுக்குட்படுத்த வேண்டிய பிரிவுகள்.
   * பாடசாலையில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொள்ள முடியுமான சுட்டிகள் எவை ?
   * பாடசாலை வளத்தின் உயர்ந்தபட்ச பயன்பாடு மற்றும் செயற்றிறனை பயன்படுத்துவதற்குரிய சுட்டிகள் எவை ?
   * பாடசாலையில் ஆசிரியர் தொழிற்றுறையை விருத்தி செய்வதற்கான சுட்டிகள் எவை ?
   * பாடசாலையில் பாடவிதான பணிகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய சுட்டிகள் எவை?
   * பாடசாலை உள்ளக மதிப்பீட்டிற்குரிய சுட்டிகள் எவை ?
   * மாணவர் அடைவு மட்டத்தை விருத்திசெய்வதற்குரிய சுட்டிகள் எவை?

   என பாடசாலையில் தற்போது காணப்படும் தேவைகள் பின்னடைவுகள் பிரச்சினைகளுக்கமைய கல்வித் தர மேற்பார்வை வழிகாட்டலில் நான்காவது பிரிவில் ஆராய்ந்து காட்டிகளை தேர்ந்தெடுக்க முடியும்.

2. அத்துடன் வாராந்தம் ∴மாதாந்தம் ∴மூன்று மாதத்திற்கு ஒரு முறை ∴06 மாதத்திற்கு ஒரு முறை∴ வருடாந்தம் மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டிய குறைகள் மற்றும் கல்விக் சுட்டிகள் எவை என அதிபர் உட்பட முகாமைத்துவக் குழுவினால் ஆராய்ந்து உரிய கால எல்லையுடன் குறுகிய திட்டமிடலை ஆசிரிய முழாமிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. அதன் மாதிரிப் படிவம் இணைப்பு 03இல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கல்லூரியின் ∴பிரிவின் ∴ துறையின் பாடம் அல்லது ஆசிரியரின் தேவைக்கமைய சுட்டிகளைத் தேர்ந்தெடுத்து திட்டங்களை விருத்திசெய்ய முடியும்.

பின்னிணைப்பு 02

### உள்ளக மதிப்பீட்டுக் குழு

* அதிபர் பாடசாலையின் சிரேஷ்ட முகாமைத்துவ குழுவுடன் கலந்துரையாடி உள்ளக மதிப்பீட்டுக் குழுவை நியமிக்க வேண்டும்.

அதிபர், பிரதி அதிபர்கள் இருவர் மற்றும் சிரேஷ்ட ஆசிரியர் சிரேஷ்ட முகாமைத்துவ

குழாமில் கட்டாயமாக உள்ளடக்க வேண்டும் (2005 /22 சுற்றறிக்கைக்கமைய)

## பின்னிணைப்பு 03

**பாடசாலை கல்வி செயற்பாட்டின் பண்புசார் விருத்திக்கான தரம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டுத் திட்டமிடல்** - (நமது பாடசாலையின் தேவைகளுக்கமைய தர வழிகாட்டலின் பக்க இலக்கம் 23 தொடக்கம் 29 வரை ஆராய்ந்து காட்டிகளை தேர்ந்தெடுக்கவும்.
இது உதாரணமாகக் குறிப்பிட்ட மாதிரியாகும்.

மாகாணம் ............................................ பாடசாலையின் பெயர் .............................................
வலயம் ............................................. வருடம் ..........................................
கோட்டம் .............................................

| அபிவிருத்தி செய்ய தேர்ந்தெடுத்த துறைகள் | தேர்ந்தெடுத்த | | கால எல்லை | | | | | | | | | | | | மதிப்பீட்டு தவணைகளின் எண்ணிக்கை | பெற்ற புள்ளிகள் | தேவைப்படும் வளம் | பொறுப்பு | மேற்பார்வை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பொது முகாமைத்துவம் | 1 | 1.1- பாடசாலையின் இலக்கு | ஜ | பெ | மா | ஏ | மே | ஜு | ஜு | ஆ | செ | ஒ | நவ | டி | | | | | |
| | | 1.2- பாடசாலையின் நோக்கு | | | | | | | | | | | | | | | | | |
| | 2 | 2.2-வருடாந்த செயற்பாட்டுத் திட்டமிடல் | | | | | | | | | | | | | | | | | |
| | 5 | 5.2- நேரசூசி | | | | | | | | | | | | | | | | | |
| | | 5.3- வகுப்பறை அறிக்கைப் புத்தகம் | | | | | | | | | | | | | | | | | |
| | 6 | 6.1- பயன்மிக்க முகாமைத்துவ தகவல் முறைமை | | | | | | | | | | | | | | | | | |
| 3 பாடவிதான முகாமைத்துவம் | 2 | 2.1- அத்தியாவசிய கற்றல் திறன் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடு | | | | | | | | | | | | | | | | | |
| | | 2.3- ஆரம்பப் பிரிவின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | 3.1- வருடாந்த பாடவிதானத் திட்டமிடல் | | | | | | | | | | | | | | | | | |
| | | 3.2- பண்புசார்உள்ளீட்டுப் பயன்பாடு | | | | | | | | | | | | | | | | | |
| | 5 | 5.3- செயற்பாட்டு ஆசிரியர் பங்கேற்பு (இணைப்பு 3) | | | | | | | | | | | | | | | | | |
| | 7 | 7.2- கற்றல் கற்பித்தல் செயற்பாட்டு மதிப்பீட்டு | | | | | | | | | | | | | | | | | |
| | | 7.6- ஆசிரிய பணிகளை கௌரவித்தல் | | | | | | | | | | | | | | | | | |
| 5 மாணவர் அடைவு மட்டம் | 1 | 11.1- 1 மற்றும் 2 தரங்களின் திறன் | | | | | | | | | | | | | | | | | |
| | | 1.2 3 மற்றும் 4 தரங்களின் திறன் | | | | | | | | | | | | | | | | | |
| | 4 | 4.1 தவணைப் பரீட்சைப் புள்ளிகள் | | | | | | | | | | | | | | | | | |
| | | (பக்க இல 23 – 69 வரையாக ஆராய்ந்து இணைப்பு 1இன் ஆலோசனைகளுக்கமைய காட்டியை தேர்ந்தெடுக்கவும்) | | | | | | | | | | | | | | | | | |

ஆண்டின் முதல் தவணையில் இந்த மதிப்பீட்டு திட்டமிடல் பிரதி ஒன்றை கோட்டக்கல்விப் பணிப்பாளருக்கு பிரதியுடன் வலயக் கல்விக் காரியால கல்வி அபிவிருத்தி விடயப் பொருப்பாளருக்கு பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

அதிபர் ஒப்பம்............................................. திகதி :..................................

## பின்னிணைப்பு 04

### தர வட்டம் (**Quality Circle** )

ஆசிரிய சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட காட்டியை இலக்காகக் கொண்டு நடவடிக்கைகளை எடுக்கும் போது முன்னேற்றத்தை உள்ளக மதிப்பீட்டுக் குழுவினால் மேற்பார்வை செய்யப்பட்டதாக (கால எல்லைக்கேற்ப) அறிக்கைகளைப் பேணவேண்டும்.) பயிற்சி அமர்வின் போது அறிவுறுத்தல் வழங்கப்பட்டவாறு உரிய சேவையின் செயற்றிறன் மற்றும் பயன்பாட்டைப் பேணுவதற்காக பாடசாலையில் தரவட்டத்தை தாபிக்கும் பணிகள் பணியாளர்களினால் மேற்கொள்ள வேண்டும். தரச்சுற்று பல்வேறுபட்ட துறைகளின் மதிப்பீடு மற்றும் தாபன அபிவிருத்திக்குரிய எவ்வகையான பணிகளையும் நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தமுடியுமான உபாயமாகும்.

### தரவட்டம் என்பது யாது?

தத்தமது சேவைகளுக்குரிய பிரச்சினைகளை ஆய்வுக்குட்படுத்தி தீர்த்து அதன் மூலம் தமது தொழில் வாழ்வின் பண்புசார் விருத்தியை ஏற்படுத்துவதற்காகவும் திறமைகள் மற்றும் அறிவை விருத்தி செய்வதற்காகவும் அதன் மூலம் தாபன பயன்பாட்டை மேம்படுத்துவதற்காகவும் கலந்துரையாடல் மூலம் இணைந்துகொண்ட சிறிய ஊழியர் குழுவாகும்.

### துர வட்டத்தின் இலட்சணங்கள்

1. அங்கத்தவர்கள் 4-12 இற்கிடைப்பட்டதாக இருக்க வேண்டும்.
2. சகல உறுப்பினர்களும் நேரடிப்பங்களிப்பை வழங்க வேண்டும்.
3. தலைவர் ஒருவரை நியமித்தல்.
4. செயலாளர் ஒருவரை நியமித்தல்
5. வாரத்திற்கொரு ஒரு தடவை ஒரு மணித்தியாலம் தமது தொழிற்பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக கலந்துரையாடல்.
6. பொருத்தமான பெயரைப் பயன்படுத்தி தரச்சுற்றைப் பெயரிடல்
7. முகாமைத்துவக் குழுவின் அனுசரனையைப் பெறல்

### தரச்சுற்றின் செயற்பாடுகள்

1. தமது தொழிலுக்குரிய பிரச்சினைகளை இனங்காண்பதும் ஆய்வு தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்ளலும்.
2. முன்னுரிமைப் பட்டியலுக்கமைய தீர்ப்பதற்குரிய பிரச்சினைகளை தேர்ந்தெடுத்தல்.
3. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரியதாக தாபிக்கப்பட்ட இலக்கு ∴சுட்டிக்கமைய செயற்பாட்டுத் திட்டங்களை வகுத்தல்.
4. தீர்மானங்களை அமுல்படுத்தலும் அதற்குரிய அறிக்கைகளைப் பேணலும்.
5. முன்னேற்ற மீளாய்வு மூலம் செயற்பாட்டின் பின்னடைவுகளை இனங்காணுதல் மற்றும் தீர்வுகளின் குறைபாடுகளை பூரணப்படுத்தல்.
6. மீண்டும் எதிர்வரும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய இலக்குக் சுட்டிக்கமைய தொடர்ச்சியான அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடல்.
7. தரவட்ட செயற்பாடுகளை மீளாய்வுக்குட்படுத்தி தேவைப்படும் ஊக்குவிப்புகளை முகாமைத்துவக் குழாமுக்கு மேற்கொள்ளல். (ஆலோசனை ∴வளங்களை வழங்குதல்)
8.

| தர வட்டம் தொடர்பான தகவல் அறிக்கை | தர வட்டம் தாபிப்பதற்குரிய துறைகள் | | |
|---|---|---|---|
| | | | |
| 1. தரவட்டம் ஆரம்பித்த திகதி | | | |
| 2. தர வடடம் பெயர் | | | |
| 3. அங்கத்தவர்களின் எண்ணிக்கை | | | |
| 4. நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | | | |
| 5. இனங்காணப்பட்ட பிரச்சினைகள் | | | |
| 6. தீர்ப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரச்சினைகள் | | | |
| 7. பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பயன்படுத்திய காலம் | | | |
| 8. பிரச்சினைகளைத் தீர்க்கும்போது முகாமைத்துவ குழாமினால் கிடைத்த அனுசரனை | | | |
| 9. தரச்சுற்றை அமுல்படுத்தும்போது தெரிவாகிய திறமைகள் (தரவட்டம் / **Bench Marks**) | | | |
| 10.தரவட்டம் வெற்றிகரமாக இடம்பெற்றதாக உறுதிசெய்யப்படும் சுட்டி | | | |

...............................................  திகதி ..................

அதிபரின் ஒப்பம் (பதவி முத்திரையுடன்)

**பின்னிணைப்பு- 05**

பாடசாலை உள்ளக மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்படும் வகுப்பு மதிப்பீடு தொடர்பான தகவல் அறிக்கை

| | 1-5 | 6-11 | 12-13 கலை | 12-13 விஞ்ஞானம் | 12-13 வர்த்தகம் |
|---|---|---|---|---|---|
| 1. பாடசாலையில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | | |
| 2. மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | | |
| 3. அதன் விகிதாசாரம் | | | | | |
| 4. ஒரு ஆண்டிற்குள் மதிப்பீட்டிற்குட்படுத்திய தவணை எண்ணிக்கை | | | | | |
| 5. மதிப்பீட்டின் போது பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை | | | | | |
| 6. அதன் சாதாரணம் (மொத்தப் புள்ளியை ஆசிரியர் எண்ணிக்கையில் இருந்து நீக்கவும்) | | | | | |
| 7. புள்ளிகள் 1-40 இடையில் பெற்றுக்கொண்ட ஆசிரியர் எண்ணிக்கை | | | | | |
| 8. புள்ளி 41-60 இற்கு இடைப்பட்டதாக பெற்றுக்கொண்ட ஆசிரியர் எண்ணிக்கை | | | | | |
| 9. புள்ளிகள் 61-100 இடைப்பட்டதாகப் பெற்றுக்கொண்ட ஆசிரியர் எண்ணிக்கை | | | | | |
| 10. மதிப்பீட்டாளர்கள் (வகுப்பு மதிப்பீடுகளுக்கு உட்பட்ட) எண்ணிக்கை | | | | | |

(இவ்வறிக்கையை ஒவ்வொரு ஆண்டிலும் ஜுலை 31ம் திகதியளவில் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்ப வேண்டும். வருடத்தில் ஜுலை 31ம் திகதி தொடக்கம் அடுத்த ஆண்டு ஜுலை 31ம் திகதி வரையான காலம் உரிய ஆண்டாக கருதப்படும்)

(மேற்கூறப்பட்ட வகுப்பறை மதிப்பீட்டுப் பணிகளின் தர வழிகாட்டலில் பக்க இல 77-84 இல் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் மாதிரிப் படிவத்தை தேவைகளுக்கமைய பயன்படுத்த முடியும்.)

அபிவிருத்திக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளுக்குரிய இலக்கு (சுட்டி) அல்லது பலவற்றை பூர்த்திசெய்து சிறந்த பெறுபேறு (**Bench Mark**) பெற்றிருப்பின் அதுதொடர்பான விபரம்.

..............................................................................................................................................................
..............................................................................................................................................................

(இவ்வாறு தெரியவரும் பின்னடைவு முறைமை தரக் குறிப்பு (**Bench Mark**) என அறிமுகப்படுத்த (வலய.∴ மாகாண தேசிய மட்டத்தில்) நடவடிக்கை எடுக்கப்படும்.)

மதிப்பீட்டுக் குழு

| பெயர் | பதவி | ஒப்பம் |
|---|---|---|

1.

2.

3.

............................. திகதி ......................

அதிபர் ஒப்பம்
பதவி முத்திரையுடன்

பின்னிணைப்பு 06

பாடசாலையின் பெயர் :.........................................................

ஆண்டு :...................................................................................

தவணை :..................................................................................

| பாடம் | தரம் 6 | | | | தரம் 7 | | | | தரம் 8 | | | | தரம் 9 | | | | தரம் 10 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 40 இற்குள் | 41-60 வரை | 61-80 வரை | 81-100 வரை | 40 இற்குள் | 41-60 வரை | 61-80 வரை | 81-100 வரை | 40 இற்குள் | 41-60 வரை | 61-80 வரை | 81-100 வரை | 40 இற்குள் | 41-60 வரை | 61-80 வரை | 81-100 வரை | 40 இற்குள் | 41-60 வரை | 61-80 வரை | 81-100 வரை |
| சமயம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| சிங்களம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| ஆங்கிலம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| கணிதம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| விஞ்ஞானம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| வரலாறு | | | | | | | | | | | | | | | | | | | | |
| புவியியல் | | | | | | | | | | | | | | | | | | | | |
| உயிரியல் திறன் | | | | | | | | | | | | | | | | | | | | |
| பிரஜைகள் கற்கை | | | | | | | | | | | | | | | | | | | | |
| அழகியற் கலை 1. சித்திரம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| 2. நடனம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| 3. சங்கீதம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| பிரயோகத் தொழில் நுட்பம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |

## தவணைப் பரீட்சைப் புள்ளிகளுக்கமைய மாணவர் அடைவு மட்ட ஆய்வு அறிக்கை

(அவ்வவ் பாடங்களுக்காக உரிய புள்ளிகளைப் பெற்று மாணவர் எண்ணிக்கையை கூட்டினுள் குறிப்பிடுக. சமமான தரங்கள் இருப்பின் சகல சமமான தரங்களினதும் மாணவர் எண்ணிக்கையை இணைத்து உரிய மாணவர் எண்ணிக்கையை கணிப்பீடு செய்யவும். ஒவ்வொரு தவணைப் பரீட்சைக்குப் பின்னரும் இவ்வாறான புள்ளி ஆய்வை பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியரினால் புள்ளிப் புத்தகத்தில் உள்ளடக்க வேண்டும்)

அதிபரின் ஒப்பம் ..................................... திகதி .........................

**பின்னிணைப்பு 07**

அதிபரினால் ஆண்டு இறுதியில் வலயத்திற்கு அனுப்ப வேண்டிய பாடசாலை உள்ளக மதிப்பீடு தொடர்பான அறிக்கையின் மாதிரிப்படிவம்

| துறை | மதிப்பீட்டிற்கு உட்படுத்திய காட்டியின் எண்ணிக்கை | இதற்காகப் பெறக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் | மதிப்பீட்டின் மூலம் பெற்றுக்கொண்ட புள்ளிகள் | அதன் விகிதாசாரம் |
|---|---|---|---|---|
| 1. பொது முகாமைத்துவம் | | | | |
| 2. பௌதிக மனிதவள முகாமைத்துவம் | | | | |
| 3. பாடநெறி முகாமைத்துவம் | | | | |
| 4. இணைப் பாட செயற்பாடுகள் | | | | |
| 5. மாணவர் அடைவு | | | | |
| 6. மாணவர் நலனோம்பு | | | | |
| 7. பாடசாலை மற்றும் சமூகம் | | | | |

பாடசாலையின் மொத்த மதிப்பீட்டுப் புள்ளிகளின் விகிதாசாரம் .....................

அதிபரின் ஒப்பம் ............................................... திகதி ........................

அதிபர் உட்பட சிரேஷ்ட முகாமையாளர் சபையினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டு திட்டமிடலுக்கமைய வழக்கமான அறிக்கையை ஆவணத்தில் அல்லது **ஊசு.** புத்தகத்தில் பேண வேண்டும். அச்சுருக்கம் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு விவாகரத்திற்கமைய இணைப்பு இல 07 இன் மாதிரிப் படிவத்தில் உள்ளடக்கி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிவிருத்திக்கு அனுப்ப வேண்டும்.

| துறை | மதிப்பீட்டிற்கு உட்படுத்திய காட்டியின் எண்ணிக்கை | இதற்காகப் பெறக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் | மதிப்பீட்டின் மூலம் பெற்றுக் கொண்ட புள்ளிகள் | அதன் விகிதாசாரம் % |
|---|---|---|---|---|
| 1. பொது முகாமைத்துவம் | 5 | 25 | 15 | 60 |
| 2. பௌதிக மனிதவள முகாமைத்துவம் | 5 | 25 | 12 | 48 |
| 3. பாடநெறி முகாமைத்துவம் | 8 | 40 | 20 | 59 |
| 4. பாட இணைச் செயற்பாடுகள் | 4 | 20 | 15 | 75 |
| 5. மாணவர் அடைவ | 25 | 125 | 62 | 50 |
| 6. மாணவர் நலனோம்பு | 5 | 25 | 10 | 40 |
| 7. பாடசாலை மற்றும் சமூகம் | 5 | 25 | 10 | 40 |
| மொத்தம் | 57 | 285 | 144 | 363 |

15/25*100 = 60

363/7 = 51

பாடசாலையின் மொத்த மதிப்பீட்டு புள்ளி விகிதாசாரம் = 144/285 * 100 = 51

(பண்புசார் விருத்தி மதிப்பீட்டு வழிகாட்டலின் பக்க இல 18 – 22 வரையான ஆராயவும்)

## பின்னிணைப்பு 08

கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்பட வேண்டிய சுருக்க அறிக்கையின் மாதிரிப் படிவம்............................................. கோட்டப் பாடசாலை வெளிவாரி மதிப்பீடு தொடர்பான 4 மாத அறிக்கை.

| | | | மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் உரிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | | | தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பீட்டுத் துறைகளுக்குரியதாக பெற்றுக்கொண்ட புள்ளிகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மதிப்பீட்டிற்குட்படுத்திய பாடசாலையின் பெயர் | மதிப்பீட்டுக் காலம் திகதி | மதிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை | 1-5 | 6-11 | 12-13 | 1-40 | 41-60 | 61-100 | பொது முகாமையானர் | பௌதிக மானிய வள முகாமையாளர் | பாடவிதான முகாமையாளர் | புாட விதான | மாணவர் அடைவு மட்டம் | மாணவர் நலனோம்பு | பாடசாலை சமூகம் | மொத்தப் புள்ளிகள் | மொத்த விகிதாசாரம் |
| 1 | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | | | | |

கோட்டத்தின் பொது மதிப்பீட்டு விகிதாசாரம் ................................
(மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையை பாடசாலை எண்ணிக்கையிலிருந்து பிரித்து பொது விகிதாசாரத்தை கணிப்பீடு செய்தல்)
(ஏதாவதொரு மதிப்பீட்டுத் துறை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாதபட்சத்தில் ஒ புள்ளடி இடுக.
கோட்டத்திற்குள் இனங்காணப்பட்ட சிறந்த தர வேலைத்திட்டங்கள் (**Bench marks**) தொடர்பான விபரம்
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
....................................................................................................................................

கோட்டத்திற்குள் இனங்காணப்பட்ட பிரதான பிரச்சினைகள் மற்றும் அதனைத் தீர்ப்பதற்கான தங்களது ஆலோசனைகள்
...........................................................................................................................................................
...........................................................................................................................................................
...........................................................................................................................................................
...........................................................................................................................................................

(தேவையெனின், வேறொரு படிவத்தில் குறிப்பிட்டு இதனுடன் இணைக்கவும்.

திகதி............................ ..................................................

கோட்டப் கல்விப்பணிப்பாளரின் ஒப்பம்
பதவி முத்திரையுடன்

## பின்னிணைப்பு - 09

வலயக் கல்விப் பணிப்பாளரினால் மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அமைச்சின் முகாமையாளர் தரப் பிரிவின் பணிப்பாளருக்கு வழங்கவேண்டிய சுருக்க அறிக்கையின் மாதிரிப் படிவம்.

| | | | மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் உரிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | | | தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பீட்டுத் துறைகளுக்குரியதாக பெற்றுக்கொண்ட புள்ளிகள்.׃. | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மதிப்பீட்டிற்குட்படுத்திய பாடசாலையின் பெயர் | மதிப்பீட்டுக்காலம் திகதி | மதிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை | 1-5 | 6-11 | 12-13 | 1-40 | 41-60 | 61-100 | பொது முகாமையாளர் | பௌதிக மானிய வள முகாமையாளர் | பாடவிதான முகாமையாளர் | பாட விதான | மாணவர் அடைவு மட்டம் | மாணவர் நலனோம்பு | பாடசாலை சமூகம் | மொத்தப் புள்ளிகள் | மொத்த விகிதாசாரம் |
| 1 | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | | | | |

வலயத்தின் பொது மதிப்பீட்டு விகிதாசாரம் ................................
(மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையை பாடசாலை எண்ணிக்கையிலிருந்து பிரித்து பொது விகிதாசாரத்தை கணிப்பீடு செய்தல்)
(ஏதாவதொரு மதிப்பீட்டுத் துறை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாதபட்சத்தில் ஒ புள்ளடி இடுக.
வலயத்திற்குள் இனங்காணப்பட்ட சிறந்த தர வேலைத்திட்டங்கள் (**டீநஉொ அயசமள**) தொடர்பான விபரம்

.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................
.........................................................................................................................................

வலயத்திற்குள் இனங்காணப்பட்ட பிரதான பிரச்சினைகள் மற்றும் அதனைத் தீர்ப்பதற்கான தங்களது ஆலோசனைகள்

.............................................................................................................................................................
.............................................................................................................................................................
.............................................................................................................................................................

(தேவையெனின், வேறொரு படிவத்தில் குறிப்பிட்டு இதனுடன் இணைக்கவும்.)

திகதி ...............................

.........................................................
வலயக்கல்விப் பணிப்பாளரின் ஒப்பம்
பதவி முத்திரையுடன்

**பின்னிணைப்பு - 10**

மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் கல்வி அமைச்சிற்கு வழங்கவேண்டிய முன்னோடி மதிப்பீட்டு அறிக்கை.

| | | மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் உரிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | | | தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பீட்டுத் துறைகளுக்குரியதாக பெற்றுக்கொண்ட புள்ளிகள்.:. | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மதிப்பீட்டிற்குட்படுத்திய வலயத்தின் .:. கோட்டத்தின் பெயர் | வலயத்தில் கோட்டத்தில் மதிப்பீட்டிற்குட்படுத்திய பாடசாலைகளின் | 1-5 | 6-11 | 12-13 | 1-40 | 41-60 | 61-100 | பொது முகாமையாளர் | பௌதிக மானிய வள முகாமையாளர் | பாடவிதான முகாமையாளர் | இணைப்பாட | மாணவர் அடைவு மட்டம் | மாணவர் நலனோம்பு | பாடசாலை சமூகம் | மொத்தப் புள்ளிகள் | மொத்த விகிதாசாரம் |
| 1..........................வலயம் | | | | | | | | | | | | | | | | | |
| கோட்டம் | | | | | | | | | | | | | | | | | |
| 1 | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | | | |
| 2..........................வலயம் | | | | | | | | | | | | | | | | | |
| கோட்டம் | | | | | | | | | | | | | | | | | |
| 1 | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | | | |
| 3............................வலயம் | | | | | | | | | | | | | | | | | |
| கோட்டம் | | | | | | | | | | | | | | | | | |
| 1 | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | | | |
| 4............................வலயம் | | | | | | | | | | | | | | | | | |
| 1 | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | | | | |

மாகாணத்தின் பொது மதிப்பீட்டு விகிதாசாரம் ...............................

(மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையை பாடசாலை எண்ணிக்கையிலிருந்து பிரித்து பொது விகிதாசாரத்தை கணிப்பீடு செய்தல்)

(ஏதாவதொரு மதிப்பீட்டுத் துறை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாதபட்சத்தில் ஒ புள்ளடி இடுக.

மாகாணத்திற்குள் இனங்காணப்பட்ட சிறந்த தர வேலைத்திட்டங்கள் (**Bench marks**) தொடர்பான விபரம்

..........................................................................................................................................................................

..........................................................................................

மாகாணத்திற்குள் இனங்காணப்பட்ட பிரதான பிரச்சினைகள் மற்றும் அதனைத் தீர்ப்பதற்கான தங்களது யோசனைகள்

..........................................................................................................................................................................

..........................................................................................

(தேவையெனின் வேறொரு படிவத்தில் குறிப்பிட்டு இதனுடன் இணைக்கவும்.)

திகதி ............................

.........................................................

மாகாணக்கல்விப் பணிப்பாளரின் ஒப்பம்

பதவி முத்திரையுடன்